[*2019 ஜூலை 15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

105—

கால்நடை கிளை நிலையம்

***13160—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கால்நடை பராமரிப்புத் துறையில் 23–1–2018 ஆம் நாளிட்ட கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (காப2) துறை, அரசாணை நிலை எண் 9–ன்மூலம் 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் பட்டியலில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளம் கிராமத்திற்கு புதிய கால்நடை கிளை நிலையம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களில் மனித தெய்வமாக, மனிதப் புனிதராக வாழ்ந்து மறைந்தும், இன்றைக்குத் தமிழகத்தினுடைய அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் கருணைத் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு*

2019 ஜூலை 15]

தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை, மக்களுக்காக, மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளம் என்பது 20 குக்கிராமங்கள் அடங்கியதாகும். கொடிக்குளம் ஊராட்சி அதிகமான கால்நடைகள் இருக்கிற ஒரு பகுதியாகும். அங்கே கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், உத்தரவு அனுப்பி 6 மாத காலங்களாகியும், இன்னும் அந்தக் கொடிக்குளத்திலே கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படவில்லை. அது இன்னும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. ஆகவே, அதை ஆய்வு செய்து விரைவில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொடிக்குளம் கிராமத்தினைப் பொறுத்தவரையில், இந்தப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் கொடிக்குளம் கிராமத்திற்குச் சென்று மாமன்ற உறுப்பினர் அவர்கள் கையாலே கால்நடை கிளை நிலையத்தினைத் திறப்பதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த உசிலம்பட்டி நகரில் கால்நடை மருந்தகமாக உள்ளதை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும், மேலும், உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக்*

கொண்டு கால்நடை பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் அலுவலகத்தை அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டியில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தரும்படியும், அதேபோல உசிலம்பட்டி ஒன்றியப் பகுதிகளில் கல்லூத்தூட்டி ஊராட்சியில் ஒரு புதிய கால்நடை கிளை நிலையமும், வகுரணி ஊராட்சியில் ஒரு புதிய கால்நடை கிளை நிலையமும், உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்திலுள்ள பெருங்காமநல்லூரில் புதிய கால்நடை கிளை நிலையம் ஒன்றினையும் கனிவுடன் பரிசீலனை செய்து அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி, ஒரு கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட, கால்நடை மருந்தகத்திற்கு தினந்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்குமேல் இருத்தல் வேண்டும். மேலும் உள்நோயாளிப் பிரிவு, ஊடுகதிர் கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதிய இட வசதிகள் இருத்தல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கோரிய உசிலம்பட்டி கால்நடை மருந்தகம் சுமார் 1.75 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. மேலும், சிகிச்சை மற்றும் இதர சேவைகளைப் பெற்றிட தினமும் சராசரியாக 40 முதல் 50 வரை கால்நடைகள் வருகை தருவதாலும், உள்நோயாளிப் பிரிவு, ஊடுகதிர் கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதிய இடவசதி இருப்பதாலும் உசிலம்பட்டி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாக தரமுயர்த்தப்படும் நேர்வுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதை

2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, உசிலம்பட்டி தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களுக்கு கால்நடை கிளை நிலையங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இந்த ஆண்டு மேற்படி உறுப்பினர் கோரிய பகுதிகளுக்கு கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***2821—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி புதிய கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனை 139 படுக்கைகளைக் கொண்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 800 புற நோயாளிகளும், 85 உள்நோயாளிகளும் வந்து சிகிச்சை பெறுவதோடு, 30 பிரசவங்களும் நடக்கக்கூடிய மருத்துவமனையாகவும் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் வசதிகளை அந்த நோயாளிகளின்